இன்று
என்றும்
நன்று

இன்று மின்னிதழ்

2026
ஜூலை
1–15

இன்று மின்னிதழ் இலவச மாதமிருமுறை



ஜூலை 2026 சிறப்பாசிரியர்

கே.அசோகன்

அடுத்த இதழ் என் வீட்டுத்தோட்டம் – சிறப்பிதழ்

இன்று மின்னிதழ்

இன்று ஆசிரியரிடமிருந்து



அனைவருக்கும் வணக்கம். மினிக்கதை சிறப்பிதழ் மின்மினியாக மின்னியதாக பலரும் பாராட்டு தெரிவித்தனர். வாழ்த்திய அனைவருக்கும் நன்றி...

இந்த இதழ் திரு.கே.அசோகன் ஐயா அவர்களின் தயாரிப்பை ரசித்து படியுங்கள்...

அடுத்த ஜீலை 16-31 இதழ் என் வீட்டுத்தோட்டம் சிறப்பிதழ். விபரம் இதழின் உள்ளே உள்ளது. அனைவரும் கலந்துகொள்ளுங்கள்.

எழுத்து என்பது நல் கிணறு போலத்தான்... இறைக்க இறைக்க ஊறும் கிணறு போல எழுத எழுத உங்கள் எழுத்துக்கள் உலக தரம் பெறும். எனவே எழுதுவதில்

சோர்வடையாதீர்கள். நல்ல முயற்சிகளை எப்போதும் செய்யுங்கள்.

படியுங்கள்...

எழுதுங்கள்...

அனைவருக்கும் நன்றி...

ஆசிரியர் வெ.கோபிநாத்,
Whatsapp : 7094053241
e.mail– indhrumail@gmail.com
Web Site : www.indhru.in

சிறப்பாசிரியர்
கே.அசோகன்
அலைபேசி எண்.
9047896065





ஆழ்ந்த இரங்கல்...

இன்று மின்னிதழ்

என்னுரை...



1980 ஆம் ஆண்டுகளில் நான் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். அப்பொழுது என கவிதை எழுதுவதில் நாட்டம் இருந்தது. ஒரு நாள் மிதிவண்டியில் சென்று கொண்டிருந்த பொழுது, ஒரு பெட்டிக் கடையில் தாய் மண் என்ற இலக்கிய இதழ் ஒன்று கண்ணில் பட்டது.

அதை வாங்கி படித்து முடித்த பின்பு ஒரு கவிதை எழுதி நேரிடையாகவே அந்த இதழின் ஆசிரியர் திரு.அரு.அருமைநாதன் அவர்களின் இல்லம் தேடி சென்று அவரை சந்தித்தேன். அவர் என்னை மிக்க மரியாதையும் அமர வைத்து தேநீர் அருந்த சொல்லி விவரங்கள் கேட்டார். சிறிது நேர உரையாடல்களுக்கு பிறகு நான் எழுதிய ஒரு கவிதையினை அவரிடம் காண்பிக்க அவர் உடனே அதை படித்து பார்த்து சிறு திருத்தங்கள் செய்து நன்றாக இருக்கிறது இன்னும் நிறைய எழுதுங்கள் என்று ஊக்கப்படுத்தினார்.

பின்பு வீடு திரும்பி அந்த கவிதையினை மறந்து விட்டேன். அடுத்த மாதம் தாய் மண் இதழில் எனது கவிதை வெளியாகி இருந்த து. அவ்வளவதான் வானத்தில் பறப்பது போல ஒரு பிரமை.

மீண்டும் கவிஞர் அரு.அருமைநாதன் அவர்களை சந்தித்து அவரின் அறிவுரைகளும், அவரின் அனுபவங்களும் கேட்டறிற்தேன். அவர் திராவிட இயக்கத்தில் முழு மூச்சாக தன்னை அர்ப்பணித்து கொண்டு தமிழுக்கு தொண்டாற்றி வந்தார். அவர் பேசும் பொதுக் கூட்டங்களுக்கு என்னை அழைத்து சென்று அங்கேயே தலைப்பு தந்து கவிதை எழுத வைத்து என்னை ஊக்குவித்தார். என்னை மட்டுமல்ல பெரம்பூர் பகுதியில் ஏராளமான கவிஞர்களை உருவாக்கியதில் அவருக்கு நிகர் அவர்தான்.

அடுத்த தாக என்னுடைய தம்பி ரவி சென்னை பூக்கடை காவல் நிலையம் அருகில் உள்ள ஜவுளிக்கடையில் பணிபுரிந்து வந்த பொழுது, அவர் ஒரு கையெழுத்து பத்திரிகை நடத்தினார். நான் வீட்டில் சில நேரங்களில் உறங்கி கொண்டிருக்கும் பொழுது, ஏதாவது எழுதுங்கள் அண்ணா என்று ஊக்குவித்து உற்சாகப்படுத்துவார்.

அப்படி எழுதுவதற்காகவே நிறைய படிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு அதனால் அருகில் உள்ள கிளை நூலகத்திற்கு படிக்க சென்று விடுவேன்.

அறிஞர் அண்ணாவின் நூல்கள் படிக்க படிக்க அவரின் அடுக்கு மொழி சொல்லாற்றல் எனக்கு பிடித்து போக அவரின் நடையிலேயே சில கவிதைகள் எழுதினேன். அவைகள் சிற்றிதழ்களில் வெளியாகின அவை முல்லைச்சரம், பொன்னகரம் போன்ற இதழ்.

அப்பொழுதுதான் என் தம்பி வாயிலாக திரு உயதம் ராம் அறிமுகமானார். அவர் நடத்தும் கூட்டங்களில் கலந்து கொள்வது, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இப்படி என்னை வளர்த்து கொள்வதற்கு ஆரம்ப காலத்தில் இம்மூவருமே எனக்கு ஆசானாகவும் வழிகாட்டியாகவும் இருந்தார்கள் ஆதலால்தான் இன்று அம்மா என்ற சிறுகதை தொகுப்பு நீயும் அம்பானிதான், சின்ன சைக்காலாஜி என்ற தன்னம்பிக்கை கட்டுரை நூல்கள் காதல் முதல் கடவுள் வரை என்ற கவிதைத் தொகுப்பு மற்றும் சிறுவர் கதைகள் நூல்கள் ஆன பீட்ஸா சாப்பிட்ட காகம், ஆந்தைக் குகையில் இளவரசி என்ற நூல்களின் ஆசிரியராக முன்னேறி இருப்பதற்கு அவர்களின் அடித்தளம் என்பதை என்னால் மறுக்க இயலாது.

–கே. அசோகன், சென்னை

இன்று மின்னிதழ்

பெற்ற விருதுகள்



கே. அசோகன் சென்னை

அலைபேசி எண்.9047896065

மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 2017

வழங்கிய சிந்தனைச் சிகரம் விருது 2017

தமிழக எழுத்தாளர்கள் குழுமம் 2018

தமிழ்ச்சுடர் விருது

2024 திரு.வி.க. திருநாள் விழா 2024

திரு.வி.க. அரங்க இயக்க நற்சான்றோர் விருது 2024

2025 தமிழ்ப்பெரியார் திரு.வி.க. திருநாள் விழா 2024

17–வது ஆண்டு விழா

திரு.வி.க. நட்புநிறை நேரியர் விருது 2025

தமிழக எழுத்தாளர்கள் குழுமம் 2018

தமிழ்ச்சுடர் விருது

தமிழகத் தமிழறிஞர் பேரவை பாடியநல்லூர், சென்னை

வழங்கிய விருதுகள்

1984 –ஆம் இலக்கிய சங்கமம் – பேரறிஞர் அண்ணா விருது

1990 – ஆம் இலக்கிய சங்கமம் – தமிழ்த்தாய் விருது

1992 – ஆம் இலக்கிய சங்கமம்– அ.சிவசண்முகம் விருது

இன்று மின்னிதழ்

வாழ்த்து மடல்



எழுத்தாளர் மும்பை கே. அசோகன் அவர்கள் தயாரிக்கும் 'இன்று' இதழ் சிறப்புற அன்பு நல்வாழ்த்துகள்! இனிய பாராட்டுகள்!

தமிழக எழுத்தாளர் குழுவின் வழியாக எனக்கு அறிமுகமான கே. அசோகன் அவர்கள் ஓர் இனிய பல்சுவைப் படைப்பாளி. கதை, கவிதை, கட்டுரை, நாடகம், சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள் என அனைத்திலும் சிறப்புறும் கதம்பப் படைப்பாளர்.

தமிழக எழுத்தாளர் குழுவின் விழாக்களில் தவறாமல் பங்கேற்றுக் கலந்து கொள்ளும் அசோகன் அவர்கள் படிப்பதில், எழுதுவதில் மட்டுமல்ல. மற்றவர்களிடம் பழகுவதிலும், மற்றவர்களுக்கு மதிப்பளிப்பதிலும் கூட மிக அருமையான நண்பர்!

தானே பாடல் இயற்றி இசையமைத்து



முத்து ஆனந்த் வேலூர்

வழங்குவதில் அசோகன் அவர்கள் தனியொரு சிறப்புப் பெற்றவர்!

மற்றவர்களை உற்சாகப் படுத்துவதிலும் ஊக்கப்படுத்துவதிலும் அசோகன் அவர்களுக்கு நிகர் அசோகன் தான்!

பல துறைகளிலும் அசோகன் அவர்கள் சாதனைகள் புரிய இனிதே வாழ்த்துகிறேன்!.


ஆழ்கடல் போல் அமைதியானவர்!

****

சிந்தனைச் சிகரம், தமிழ்ச்சுடர் உள்ளிட்ட பல விருதுகளை பெற்ற எழுத்தாளர் கே.அசோகன் அவர்கள் சிறுகதை, கவிதை, கட்டுரை, ஜோக் என அத்தனை தளங்களிலும் முத்திரை பதித்து வரும் பல்துறை வித்தகர்.

சமீப காலமாக மிகச் சிறந்த 'ஹைக்கூ'க்கள் படைத்து பல்வேறு பத்திரிகைகளில் பல பரிசுகளை வென்றுள்ளார்.

'விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி' என எழுத்துலகில் ஓயாமல் உழைத்து வருபவர்.



– ரிஷிவந்தியா, தஞ்சாவூர்.

ஆழ்கடல் போல் மிகவும் அமைதியானவர்.வெற்றிகளை தன் தலைக்கு ஏற்றாதவர்.

இவர் நூறாண்டு வாழ்ந்து, பார் போற்றும் படைப்புகளை தொடர்ந்து படைத்திட எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்!

இன்று மின்னிதழ்

வாழ்த்து மடல்





குடந்தை பரிபூரணன்

தமிழ் எழுத்துலகை வெற்றிகொண்ட ஒரு சாம்ராட் அசோகன்

கையில் எடுக்கும் தமிழ் இதழ்களில் எல்லாம், அது அச்சிதழாக இருந்தாலும் சரி மின்னிதழாக இருந்தாலும் சரி, உலகில் எந்த மூலையில் உதிக்கும் இலக்கிய அமைப்புகளாக இருந்தாலும் சரி, அவைகளில் எல்லாம் அசோகன் அவர்களது ஏதாவது ஒரு படைப்பு, நிச்சியம் இடம்பெற்றிருப்பதைக் காணமுடியும். அந்த அளவுக்கு சுறுசுறுப்பாக தேனீ அடையில் தேன் சேர்ப்பதைப் போல படைப்புகளை கொண்டு வந்து சேர்த்துக் கொண்டே இருப்பார்.

கவிதையாக இருந்தாலும் சரி கதையாகவோ, கட்டுரைகளாகவோ, இருந்தாலும் சரி, ஹைகூ கவிதையாக வாசகர் கடிதம், மற்றும் போட்டிகளாக இருந்தாலும் சரி தனது எழுத்து வண்மையால் பன்முகப் படைப்பாளியாக திரு அசோகன் அவர்கள் ஒளிவீசிக் கொண்டிருக்கிறார்.

நட்புக்கும் மனித நேயத்துக்கும் இலக்கணமாகத் திகழும் இவர்,தமிழக எழுத்தாளர் குழுவில் அங்கம் குழுவுக்கே பெருமை சேர்ப்பதாகவே நான் கருதுகிறேன்.

தன்னடக்கம் கூட இவரிடம் தலை வணங்கி கைகுலுக்கிக் கொள்ளும்..

"இன்று மின்னிதழ்" சங்கப் பலகையாக நீண்டு, திரு அசோகன் அவர்களுக்கு சிறப்பிதழில் இடம் கொடுத்திருப் பது, தமிழக எழுத்தாளர் குழுவுக்கும் மிக்க புகழையும் மகிழ்ச்சியைத் தேடிக் கொடுத்திருக் கிறது.

இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூரும் அம்மென்னும் முன்னே ஆயிரமுமாக, எழுதிக்குவித் துக்கொண்டிருக்கும் திரு K. அசோகன் அவர்களை வாழ்த்தி மகிழ்வதில் பெருமை கொள்கிறேன்.





தங்கம்



கே. அசோகன்

"ஸார், போலிஸ் ஸ்டேஷனா ?

ஆமாம்பா, என்ன ?

"என்னோட தங்கத்தைக் கடத்திட்டாங்க ஸார்"

"சரி...சரி, கார் அடையாளத்தைச் சொல்லு"

"ஸார், கார் நெ.டி.என் 20– 2222

"எத்தனை கிலோ இருக்கும்?"

"சுமாரா ஒரு 22 கிலோ இருக்கும் ஸார், சொக்க தங்கம் ஸார், நல்லா மினுமினுன்னு பார்க்கவே ஜொலிக்கும் ஸார். சீக்கிரமா கண்டுபிடிச்சு தருவீங்களா? இல்லே மேலிடத்துக்கு போகணும்ன்னா நான் ரெடி"

வேண்டாம்பா, இதோ இப்பவே கன்ட்ரோல் ரூமுக்கு சொல்லிடறேன்., அடுத்த ஒரு மணி நேரத்தில், எல்லா செக் போஸ்ட்டுகளிலும், சோதனை நடத்தி... கடைசியில் ஒன்றும் கிடைக்கவில்லை. சோர்ந்து போய் விட்டார்கள்.

போலிஸ் ஸ்டேஷனுக்கு மறுபடியும் தொலைபேசி கிணுங்க.. " ஏட்டு எடுத்தார், " ஸார், இப்பத்தான் தங்கம் கிடைச்சுடுது, கொஞ்சம்கூட மாசுமரு இல்லாம, சொக்கதங்கமா கைக்கு கிடைச்சுடுச்சு ஸார்" பேரு தங்கம் சாரு" என்று துள்ளி குதித்தான் புகாரளித்தவன்.

"டேய் போனை வைடா" என்று துண்டித்து விட்டு, இனிமே எவனாவது தங்கத்தைக் கடத்திட்டான்னு உடான்ஸ் விட்டா அட்டெண்ட் பண்ணாதீங்க என்று இன்ஸ்பெக்டர் கட்டளையிட்டார்.

அடுத்த அரைமணியில் ....டிரிங்..டிரிங்..டிரிங்" தொலைபேசி கிணுங்கியது. ஸார், போலிஸ் ஸ்டேஷனா? கார் நெ.
டி.என் 1616–ல தங்கம் கடத்துறாங்க ஸார், உடனே மடக்கினா பிடிச்சுடலாம்" போன் துண்டிக்கப்பட்டது.

"இவனுங்களுக்கு வேலையே, என்று ஸ்டேஷனில் நன்றாக குறட்டை விட்டார் ஏட்டு.

மறுநாள் காலை பேப்பரில் "நகைக்கடையில் கொள்ளை.."கத்தி முனையில் தங்கத்தைக் காரில் கடத்திய கும்பல்" போலிஸின் நடவடிக்கை என்ன?" செய்தியைப் பார்த்ததும் ஏட்டுவின் முகம் சுருங்கியது.

இன்று மின்னிதழ்



வாழ்க்கை இப்படி இருக்கோணும்ங்க!

–கே. அசோகன், சென்னை

சட்டிக்குள்ளாற வெந்தாலும்
சந்தோஷமா சாப்பிட இட்லி போல
மல்லிப்பூ கணக்கா சிரிச்சுகிட்டே
இருக்கணும்...

சுடுகின்ற கல்மேல காய்ந்தாலும்
கஷ்டத்தைக் காட்டாம முறுக்கா
இருக்குற முறுமுறு தோசை போல
உடம்பு மெல்லிசா இருக்கணும்...

என்னதான் அடிச்சு பிசைந்தாலுமே
விரும்பி சாப்பிடுற சப்பாத்தி போல
மென்மையா பழகணும்...

கொதிக்குற எண்ணையில
தள்ளிவிட்டாலுமே பூரிப்பாய் எழும் பூரி
போல கஷ்டங்கள் வந்தாலும் மீண்டு
எழ வேண்டும்...

கட்டை விரலால ஓட்டைப்
போட்டாலும் சகித்து கொள்ளும்
மெதுவடை போல வாழ்க்கை
மிருதுவாக இருக்கணும்...

பார்க்குறதுக்கு சிக்கல்களாக
இருந்தாலும் சீனியோடு சேர்ந்த
இடியாப்பம் போல வாழ்க்கையில
சிக்கல்கள் வந்தாலுமே இனிப்பா
இருக்கணும்.

ஜோக்ஸ் – நகைச்சுவை மாலை
'தலைவர் தோத்துட்டாரே ஆனா
முகத்துல
கவலையே இல்லையே!
"ஜெயிச்சவர்கிட்ட டீல் பேசிட்டாராம்"

"ஏன்டி ஒன் புருஷனை அறை விட்ட?
போக்குவரத்து செலவுக்கு காசு
கேட்டா
பஸ்லதான் பிரியாச்சோ எதுக்கு
காசுங்கறாரு!"

பெண்கள் கண்ணீர் துடைக்கும்
கழகம்–ன்னு
மாத்தி வைச்சிட்டீங்களே!
"ஆமாம்! கர்ச்சீப் வியாபாரம்
துவங்கிட்டேன்!

"வேட்பாளர் நேர்மையப் பார்த்த தேர்தல்
அலுவலர் ஒரு நிமிஷம் புல்லரிச்சு
போயிட்டாராமே! ஏன்?"
"ஆறாம் வகுப்பு படிக்கும்போது
ஒரு பொண்ணு கன்னத்தை
கிள்ளியது
பற்றி குறிப்பிட்டிருந்தாராம்!"

"வாக்காளரும்...காதலியும்
ஒண்ணுதான்
தலைவரு சொல்றாரே! எப்படி?
"ஓட்டுப்போடற வரைக்கும்
வாக்காளருக்கு
ஐஸ் வைப்போம்... கல்யாணம்
ஆகறவரை
காதலிக்கு ஐஸ்கிரிம் வாங்கி
கொடுப்போம்!"

கே. அசோகன், சென்னை





தமிழக தமிழறிஞர் பேரவை கவியரங்கில்





புதுவை தமிழ் சங்கம் பரிசும் விருதும்

இன்று மின்னிதழ்

கே.அசோகன் கவிதைகள்



அன்பே
உனக்கு காதல் கடிதம்
எழுத
ஷெல்லியின் வரிகளா?
பைரனின் வரிகளா?
உமர்கய்யாம் வரிகளா?
எது பொருந்தும் என
ஆய்ந்த பொழுதில்
கம்பனின் காவிய வரிகளே
பொருத்தமாய் தோன்றியது
அதையே நான்
காதல் கடிதத்தில்
வடித்துள்ளேன்
எல்லை மீறாமலே!

அன்றாடம்
தொடர்ந்து வரும் நான்
இந்த நொடியில் தான்
கேள்வி பட்டேன்
நீ சிங்க பெண் படையில்
சேர்ந்து விட்டதாக
உன்னை தொடர்வதா?
இல்லையா என
தீர்மானிப்பது
உன்றன்
மிரட்டும் விழிகளிலா?
மிரளும் மான் விழிகளிலா?
சொல்லடி விழிகளாலே

வெண்பா
எழுதும் போட்டி
அதில் ஒரு
பெண் பாவையும்
வந்திருந்தாள்
என் வெண்பாவில்
தலை தட்டுவதாய்
தலையைதட்டினாள்
அவளின் பெயர்
வெண்பா

ஆர்ப்பரிப்பின்றி
மெல்லெழும்
அதிகாலை சூரியனிடம்
சொன்னது
தீக்குச்சி!
என்னிடம் நெருப்பு
இருக்கிறதென !

பூங்காவின்
ஒரு மலரில்
படபடக்கும் வண்ணத்து பூச்சி
அருகே அதனை
வியக்கும்
படபடக்கும் விழிகளோடு
மழலை
எதனை ரசிப்பது?

அடர் காடுகளில்
வளரும்
மூங்கில்கள்
சில
ஏணிப்படிகளின்
குறுக்கு கட்டைகள்
ஆகலாம்
சில இறுதி சடங்கிற்கு
உதவலாம்
சில மூங்கில்கள்
புல்லாங்குழல் ஆகலாம்
எதையும் தீர்மானிக்க
இயலாது
தன்னம்பிக்கை தான்
வாழ்க்கை
வாழ்ந்து பார்

இன்று மின்னிதழ்





ஹைக்கூ முற்றம் நிகழ்வில்





இன்று மின்னிதழ்

கூதிர்பம்

என் வீட்டுத்தோட்டம் – சிறப்பிதழ்

அடுத்த இதழ் ஜீலை 16–31 இன்று சிறப்பிதழ் என் வீட்டுத் தோட்டம் சிறப்பிதழ். உங்கள் வீட்டுத்தோட்டத்தில் என்னென்ன செடிகள் உள்ளது. உங்களுக்கு பிடித்த செடி எது? அதன் போட்டோ... உங்கள் தோட்டம் உருவாக்கப்பட்ட விதம் இப்படி சுவாரஸ்யமாக எழுதவும். ஒரு படைப்பாளருக்கு ஒரு பக்கம் ஒதுக்கப்படும். எனவே இரண்டு போட்டோ மற்றும் சுருக்கமாக உங்கள் தோட்டத்தைப் பற்றி எழுதி அனுப்பவும்.

தோட்டம் இல்லை என்பவர்கள் உங்களுக்கு பிடித்த செடி எது?

ஏன் என்று தெரிவித்தும் எழுதி அனுப்புங்கள்.

சிறந்தவற்றுக்கு வழக்கம் போல் பரிசும் உண்டு...

அனுப்ப வேண்டி கடைசி தேதி 13.07.2026



குட்டிக் கவிதைகள்



குடுகுடுப்பைக்காரன்
கையிலோ
வண்ண ஆடைகள்
வீட்டில் சேய் அம்மணம் !

கட்டம் கட்டமாய்
கட்டெறும்பின்
அணி வகுப்பு
அட ! ரங்கோலி !

மனமெனும் நாடக மேடையில்
அலங்கரிப்பதோ
ஆயிரம் வேடங்கள் !

ஓலைக் குடிசையில்
கதிரவன் பிரவேசம்
குடிசை வாசியின்
மனதினில் காரிருள் !

பி. ஆர்.கிரிஜா

அடுத்த இதழ் என் வீட்டுத்தோட்டம் – சிறப்பிதழ்

இன்று மின்னிதழ்

தேவதை



முத்து ஆனந்த், வேலூர்

உன்
அன்பைப் பற்றியும்
அழகைப் பற்றியும்
விரிவாகச்
சொல்லச் சொல்கிறார்கள்!
அதற்காக
வரி வரியாய்ச்
சொல்ல வேண்டுமா என்ன?!
தேவதை என்று
ஒரு வார்த்தை சொன்னால் போதாதா?!

உன்னை
நினைக்கும் போதே
என் மனம் பறக்கிறது...
மிதக்கிறது...
நீதான் தேவதையோ!

சொர்க்கத்தில் தான்
தேவதைகள் இருப்பார்களாம்!
என்
இல்லம் சொர்க்கமானதன் ரகசியம்
நீ
வந்ததால் தான் என்று
இப்பொழுது எனக்குத் தெரிந்தது!

அழகாக இருக்கும்
பெண்களைத்
தேவதைகள்
என்று சொல்வார்கள்!
பேரழகாக இருக்கும்
உன்னை
என்னவென்று அழைப்பார்கள்!

வடக்குத் திசையிலிருந்து
வரும் காற்றுக்கு
வாடைக் காற்று
என்று பெயர்!
தெற்குத் திசையிலிருந்து
வீசும் காற்றுக்குத்
தென்றல் என்று பெயர்!

நீ
வாழும் திசையிலிருந்து
வரும் காற்றுக்குத்
தேவதை என்று பெயரா அன்பே?!

ஒப்பனையே
தேவைப்படாத
அழகிகளுக்குத்
தேவதைகள் என்று பெயர்!

சாத்தான்களுக்கும்)கூட)
அன்பைச் செலுத்த
நினைப்பவர்களே
தேவதைகள் எனப்படுகிறார்கள்!

அணியும்
ஆடைகளுக்கும்
சூடும்
மலர்களுக்கும்
உயிர் கொடுத்து
அழகாக்குபவர்கள்
பெண்கள் எனப்படும் தேவதைகள்!

இங்கு
தேவதைகள்
வரவேற்கப்படுகிறார்கள்!
இப்படிக்கு
கா த ல்!

என் இனிய தேவதையே
உன் வருகைக்கெனவே
என்
இதயத்தின் வாசல் கதவு
எப்பொழுதும்
திறந்தே இருக்கிறது!

இன்று மின்னிதழ்

கதம்பம்

ஹைக்கூ

....
எப்பொழுதும்
பூக்கள் நிறைந்த சாலை
சுடுகாடு
....
மகசூல் அதிகம்
விற்பனை விலை குறைவு
மாம்பழம்
...
இதுவும் கடந்து போகும்
நம் நாட்டை விட்டு
வறுமை
...
கிழித்திட
கடைக்கு ஆட்கள் தேவை
காலண்டர்
...
விடுமுறை நாட்கள்
வெகுவாய் காணாமல் போனது
கோழி மரணம்

திருச்சிற்றம்பலம்
சுரேஷ்



என்னுள்ளே
என்னடி செய்தாய் ??
ஏங்கி தவிக்கிறேன்
எப்போதும் எண்ணமாய்
உயிரோட்டமாய் நீதானடி !
கற்கண்டு கனவு கூட
பாகற்காயாய் கசக்கிறது
இனித்திடும் உன் மிளகாய்
நினைவுகளால் !
சுயம் தொலைத்து –உன்
சுயமிக்கு இடும் லைக்கு–
ஹார்ட்டுகளில்
அடகு வைக்கப் படுகிறது
என் பாழாய் போன உசுரு !!
யார் என்ன சொன்னால்
என்ன ??
செவிடன் காதில் ஊதிய
சங்காய்
உன் மேல் காதலில் விழுந்து
ஒரு வோட போன் நாய் குட்டியாக
உன் பின்னலின் பின்னேயே
சுற்றி திரிகிறது
மானம் கெட்ட மனசு !





–லி.நௌஷாத் கான்–

முடிஞ்சா இப்படி சாப்புடுங்க.... 1



இலவச தமிழ் புத்தகங்கள் கிடைக்கும் இணைய தளங்கள்... Just Click தொட்டால் இணையதளம் திறக்கும்... படித்து மகிழுங்கள்...

https://www.projectmadurai.org/

https://www.noolaham.org/

https://tamildigitallibrary.in/

https://www.tamilvu.org/

https://ta.wikisource.org/

இன்று மின்னிதழ்

நூல் விமர்சனம்



நூல் பெயர் : பசுந்தளிர்
ஆசிரியர் : செந்தில்குமார் அமிர்தலிங்கம்
பக்கங்கள் : 134
வலை : ரூ 120/–
பதிப்பகம் : நண்பர்கள் பதிப்பகம், கன்னிகாபுரம், குடியாத்தம், 2022.

' பசுந்தளிர் ' என்ற பெயர் நம்மை ஈர்ப்பது போன்று, இந்நூலில் இடம்பெற்றுள்ள இருபது கதைகளும் நம்மை ஈர்க்கத்தவறவில்லை. கதைகள் முழுமையும் வாழ்க்கைப் பாடங்கள்தான். மாணவர்கள், பெற்றோர்கள், உறவுகள் , இயற்கை, பறவைகள் என்று அனைத்துச் சூழல்களையும் பெரிதும் வெளிப்படுத்தும் இந்த நூலிற்கு விறுவிறுப்பான எழுத்துகளுக்குப் பெயர் பெற்ற திரு. ராஜேஸ்குமார் அவர்களும் முனைவர் கலைநன்மணி கே. ஜி. ஜவஹர் அவர்களும் வாழ்த்துரை வழங்கியுள்ளது கூடுதல் சிறப்பாகும்.

ஆசிரியர் ஆழ்ந்த வாசிப்பனுபவம் கொண்டவர் என்பதனை, ஒவ்வொரு கதையும் எதிரொலிக்கிறது. ஆம், சிறந்த எளிய இனிய எழுத்து நடையினை கதைகளில் காணமுடிகின்றது.

தாங்கள் வசிக்கும் வீட்டினை ஒட்டி தவளர்ந்துள்ள மரத்தில் கூடுகட்டி குஞ்சுகளுடன் இருக்கும் குருவிகள் மீது அன்பு கொண்ட குழந்தை திவ்யா, வீட்டினை விரிவுபடுத்திக் கட்டுவதற்காக அந்த மரத்தினை வெட்டி அகற்ற முடிவு எடுக்கும் பெற்றோரிடம், குருவிகளும் குஞ்சுகளும் எங்கே போகும் என்று அழுது புலம்பி முகம் வாடிப்போகிறாள் திவ்யா. பெற்றோரும் மனம் மாறி மரத்தை வெட்ட வேண்டாம் என்று முடிவு செய்கின்றனர். இனிமையாக வாழும் ஒரு பறவையின் குடும்பத்தின் மீது கொண்ட பாசத்தை, 'அன்பெனும் கூடு ' என்ற கதை எடுத்துரைக்கிறது.

முழுமையாக அறியாமலேயே, ஒருவரைப் பற்றி முன் முடிவு எடுப்பதும், அவரே ஒரு கட்டத்தில் நமக்கு உதவியாக வந்து நிற்கும்போது நமது மடமையை எண்ணி நாம் வருந்துவதும் அவ்வப்போது ஆங்காங்கே நடக்கத்தான் செய்கிறது. 'டிப்ஸ்' என்ற தலைப்பிலான கதை இதனை அழகாக எடுத்துச் சொல்கிறது.

' வேர்கள்' என்று தலைப்பிடப்பட்டுள்ள கதையில், பெற்றோர்கள் கடன்பட்டு கல்வி கற்க வைக்கும் நிலையினை மனத்தில் பதித்து, மாவட்ட அளவில் முதல்மதிப்பு எடுக்கும் மாணவன் மற்றவர்கள் முன் மேடையேறி பேசும்போது, பெற்றோரின் சிரமங்களையும் அவர்களது பங்களிப்புகளையும் உணர்ந்து வைராக்கியத்துடன் நாம் படித்து முன்னேற வேண்டும் என்று உரையாற்றுவது நல்ல கருத்தான செய்தியாக உள்ளது.

' பசுந்தளிர் ' என்ற கதை அர்த்தம் பொதிந்த செய்தியைக் கொண்டுள்ளது. ஊரிலிருந்து வரும் பாட்டி களைப்புடன் வருகிறாள். மலர்விழி என்ற அவளது பேத்தி, ஏன் இப்படி வேர்த்து களைப்பாக இருக்கிறீர்கள் என்று பாட்டியிடம் கேட்கிறாள். வரும் வழியில் மரங்களே இல்லை; அதனால் நிழல் இல்லை , களைப்பு வந்துவிட்டது என்கிறாள் பாட்டி. மேலும், தான் கொண்டு வந்த மாம்பழங்களை பாட்டி தரும்போது, அந்த பழங்களும் மரங்களிலிருந்தே வருகின்றன என்று பாட்டி மூலம் அறிந்து கொள்வதுடன், மரங்களின் அவசியத்தையும் மலர்விழி புரிந்துகொள்வதாக சிறந்த கருத்தை இந்த கதை எடுத்தியம்புகிறது.

இப்படி ஒவ்வொரு கதையும் வாழ்க்கைப் பாடமாக அமையுமாறு நூலாசிரியர் எழுதியுள்ளது போற்றப்படத்தக்கதாக உள்ளது.

கா. ஹபீப் முகமது.



இன்று மின்னிதழ்

பிம்பம்



கோவைக்கவி புவனா

ஒரு அந்தி மாலை வேளையில்
தேவாலய வாசலில் கைக்
குழந்தையுடன் கண்ணன்
என்பவனால் ஏமாற்றப்பட்ட காயத்ரி
சாலையோரம் மெழுகுவர்த்தியும்
பொம்மையும் விற்றுக் கொண்டு
நின்றிருந்தாள் .



குழந்தையோ பாலுக்காய் கதற
காயத்ரியின் கண்களோ பசி
மயக்கத்தில் சொருகின.

கார்மேகங்கள் திரள இருட்டுக்கட்டிய
வானம் இடி இடிக்க ஆரம்பித்தது.
அப்போது எதிரே வந்த ஒருவர்
" ஏம்மா இந்த பொம்மை என்ன
விலை?" என்று கேட்டார்.
" நூறு ரூபாய் அய்யா " என்றாள்
காயத்ரி.
" ஐம்பது ரூபாய்க்கு வராதா ? "
என்றே பேரம் பேசத் தொடங்கினார்
அவர்.
" ஐயா ஐம்பது ரூபாய்க்கு எனக்கு
கட்டுப்படியாகாதுங்க எனக்கே
தொன்னூறு ரூபாய்க்கு தராங்க பத்து
ரூபாய் தான் எனக்கு லாபம் இத
வச்சித்தாங்கய்யா ரெண்டு
உசிரக்காப்பாத்தனும்" கெஞ்சினாள்
காயத்ரி.
"அப்படின்னா எனக்கு வேண்டாம்மா "
என்றார் இரக்கமற்ற அந்த நபர்.
" சரி வாங்கிக்கோங்க அய்யா அஞ்சு
ரூபா கொறச்சித் தாரேன்
குழந்தைக்கு பால் வாங்கறதுக்கு கூட
காசு இல்லங்க " அவள் கை கூப்பிக்
கேட்டாள். "வேண்டாம்மா" என்றே
நகர்ந்தார் துளியும் ஈவு இரக்கமில்லாத
அந்த நபர்
அவள் கண்களில் நீர் வழிய
வானமும் அவளுடன் சேர்ந்து
கொண்டது.
இதுவரை தேவாலயத்திற்குள்
செல்லாத அவள் மழைக்கு ஒதுங்கவும்
'அந்த சாமியிடமாவது
தன் குறையைச் சொல்வோம்'என்று
மனதிற்குள் நினைத்தபடி
தேவாலயத்திற்குள் நுழைந்தாள்.
பசியால் அவள் கண்கள்
தெளிவாக தெரியவில்லை
மங்கலாய்த் தெரிந்தது
தன் கண்களை தேய்த்துக் கொண்டு
பார்த்தாள் சிலையை இதோ
அவளின் பிம்பமாய் கையில்
குழந்தையோடு நின்று இருந்தாள்
தேவமாதா அந்த ஆறுதல் அவளது
பசியை மறக்க வைத்தது மனமுருக
தேவமாதாவை வணங்கிவிட்டு
தேவாலயத்தின் வாசலுக்கு வந்தாள்.
" அம்மா மெழுகு வர்த்தி விக்கிறியா"
" ஆமாம்மா"
" உன்கிட்ட இருக்கிற அத்தனை
மெழுகு வர்த்தியையும் கொடு நான்
வாங்கிக்கறேன் எனக்கு தேவைப்பட்ட
மஞ்சள் நிற மெழுகு வர்த்திகள்
உன்கிட்ட மட்டும்தான் இருக்கு "
அத்தனை மெழுகுவர்த்திகளையும்
கையில் குழந்தையுடன் இருந்த
மேரிமாதா பொம்மைகளையும் காயத்ரி
கேட்ட தொகையை விட கூடுதலாகக்
கொடுத்து வாங்கிக் கொண்டாள்
அவளைப் போலவே
கைக்குழந்தையுடன் நின்றிருந்த
அந்தப்பெண்.

இன்று மின்னிதழ்

அவசர தொலைப்பேசி எண்கள்

List of Emergency Helpline Numbers All Over in India

Helpline Number	Department
100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
104	State level Helpline for Health
108	Disaster Management / Medical Helpline
112	All in One Emergency Number (General Emergency Department of Telecommunications (DoT))
131	Indian Railway General Enquiry
139	Railway Enquiry
181	Domestic abuse and sexual violence-Women's Helpline
197	Directory Enquiry Service
198	Telephone Complaint Booking
1031	Anti Corruption Helpline
1033	Emergency Relief Centre on National Highways
1066	Anti-poison
1071	Air Accident
1072	Train Accident
1073	Road Accident / Traffic Helpline
1090	Anti terror Helpline / Alert All India
1091	Women Helpline in Distress
1092	Earth-quake Helpline Service
1096	Natural Disaster Control Room
1097	AIDS Helpline
1098	Child Abuse Hotline
1099	Central Accident and Trauma Services
1551	Kisan Call Center
1906	LPG Emergency Helpline Number
1910	Blood Bank Information
1919	Eye Donation / Eye Bank Information Service
1947	Aadhar Card - UIDAI (Unique Identification Authority of India), 1800-180-1947
1950	Election Commission of India
1800-11-4000	National Consumer Helpline

இன்று மின்னிதழ்



"தலைவர் ஏன், அவர்கிட்ட கொடுத்த மனுக்களை எல்லாம் ஆற்றில் போடுறாரு?"

"மனுக்களைக் கிடப்பில் போட்டதா யாரும் சொல்லிடக் கூடாதுன்னுதான்!"

******* ******** *******

"தலைவர் இப்பல்லாம், அவர்கிட்ட கொடுக்கிற மனுக்களைக் கிடப்பில் போடுறதே கிடையாதா... ஏன், உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துடுறாரா?"

"இல்லை, ஆற்றில் போட்டுடறார்ன்னு சொல்ல வந்தேன்!"

******* ******* *******

"அந்தக் குடும்பத்துல, ஒருத்தர்தானே குடிகாரரா இருந்தாரு... இப்போ எப்படி எல்லோருமே குடிக்கு அடிமையாணாங்க?"

"டாஸ்மாக்கை மூடச் சொல்லி, குடும்பத்தோடு குடிக்கு"போராட்டம் நடத்தினாங்களாம்!"

******* ******* *******

"டாஸ்மாக்கை மூடச் சொல்லி, குடும்பத்தோடு குடிக்கும் போராட்டம் நடத்தினாரே தலைவர்... என்னாச்சு?"

"இப்போ, அவர் குடும்பத்துல எல்லோருமே குடிகாரர்களா ஆகிட்டாங்க!"

சு. அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்

Ph: 8526037792



அடுத்த இதழ் எங்கள் வீட்டுத்தோட்டம் சிறப்பிதழ்

ஒரு இட்லியின் கதை

Idli ism
இட்லி வெந்திருக்குன்னு சொன்னா Optimism...
இட்லி வேகலைன்னு சொன்னா Pessimism...
இட்லியெல்லாம் சுட முடியாது போடான்னு பொண்டாட்டி சொன்னா Feminism...
இட்லிய 'சுட்டது' யாருன்னு பரபரப்பு கிளப்பின்னா Journalism...
இட்லிய வச்சு இட்லி உப்புமா செஞ்சதெல்லாம் Postmodernism...
இட்லி மேல made in Indiaன்னு சீல வச்சா Nationalism...
இட்லி உனக்கு கிடையாதுன்னா Facism...
இட்லி காசு கொடுத்தாத்தான் கிடைக்கும்னு தெரிஞ்சிக்கிறது Realism...
இதுக்கு மேல இட்லி கிடையாதுன்னு சொன்னா Capitalism.
இட்லி மெஷீன்லே பண்ணினா Modernism
இட்லி Fork and Spoon வெச்சி சாப்பிட்டா Elitism
இட்லி North India-la நல்ல இருக்காதோன்னு நினைச்சா Skepti-cism
இட்லி நல்லா இல்லைன்னு சொன்னா Criticism
இட்லி மட்டும் தான் நல்ல காலை உணவுன்னு ஒத்தை காலில் நின்றால் Fanaticism
இட்லி நன்றாக செமிச்சால் Metabolism
இட்லி பிடிக்காதவனை எனக்கு பிடிக்காதுன்னு சொன்ன Chauvinism
Last one ◯
இட்லியே வேணான்னு எந்திரிச்சு போயிட்டா escapism!!!!!
ஒரு இட்லிக்கு இவ்வளவு விளக்கம் தேவையா....என்று என்மேல் கடுப்பாகி... என்னை அடிக்க நீங்க நினைத்தால் அது Ter-rorism

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி



இன்று மின்னிதழ்



கவிதை!

மன நோயாளி!

அந்தத் தெருவில் மருதனை
தெரியாதவர்கள் யாரும் இருக்க
முடியாது ...

24×7 என்பது போல் அவனது
பிதற்றல் அந்த தெருவில்
எதிரொலித்துக் கொண்டே இருக்கும்!

மருதனுக்கு உறக்கம் இல்லை!
புலம்பல் மட்டுமே உண்டு !

அவனது புலம்பலில்
அவனை தனியே விட்டுப் போன
மனைவியின் பெயரும் அடங்கும்!

அவனது புலம்பல்
அத்தெருவாசிகளுக்கு
இம்சை கொடுத்தாலும் மருதனை
அவ்விடத்தை விட்டு யாரும்
அப்புறப்படுத்த தயார் இல்லை !

அதற்குக் காரணம் !
மருதன் அந்த தெருவில் வந்த பிறகு ...
திருட்டு பயமில்லை.
கொலை, கொள்ளை, குழந்தை
கடத்தல், பெண் சீண்டல் ... எதுவும் ...
மருதன் செய்ததும் இல்லை..
மருதனால் அந்த பகுதியில் எதுவும்
நடைபெறவும் இல்லை ,
ஏனெனில் மருதன் ஒரு மன
நோயாளி !

அவனுக்கு புலம்ப மட்டுமே தெரியும் !

எம்.பி தினேஷ்
கோவை – 25
PH:98942 36348



மினி கதை

வரிசை



மலர்மதி

தனியார் மருத்துவ மனையின் ஃபார்மஸியில் 'கச, கச'வென வருவோரை ஒழுங்குப்படுத்தி அவர்களை வரிசையில் நிற்க வைப்பதே நாராயணசாமியின் வேலை.

மறுநாள் ரேஷன் கடை வரிசையில் நின்றிருந்தார் நாராயணசாமி.

மழை (சென்றியுக்கள்)

(1)

பெய்யும் மழையில்
நனைந்தேன்;கரைந்தேன்;
இல்லாதவன் கண்ணீரில்.

(2)

முகாமில் சுடுசோறு
முகத்தில் சோர்வு;
மாமாவை காண்கலையே!

(3)

நடு இரவு வரை
தொடர் மழை
தொடருமே வாழ்க்கை துன்பங்கள்.

(4)

சாலையில் வெள்ளம்
மாலையில் வடியுமா?
நாளை நற்பொழுதாய் விடியுமா?

(5)

அடுக்கக இல்லம் இருளில்;
நானும் அவரும்;
முகம் பார்த்து பேச்சின்றி.

சசிகலா விஸ்வநாதன்,
சென்னை



இன்று மின்னிதழ்

"கிட்நாப்"

(ஒரு பக்கக் கதை)



நள்ளிரவு. பிரபல இதய மருத்துவர் அரவிந்தின் போன் ஒலித்தது. "உங்க பொண்ணு எங்ககிட்ட இருக்கு."

அவர் அதிர்ச்சியுடன் எழுந்தார். "யாரு நீங்க? எவ்வளவு பணம் வேண்டும்?"

மறுமுனையில் அமைதி. பிறகு ஒரு குளிர்ந்த குரல்.

"பணம் வேண்டாம் டாக்டர்... நீங்க அஞ்சு வருடத்துக்கு முன்னாடி செய்த தவறுக்கு தண்டனை வேண்டும்."

அரவிந்தின் முகம் வியர்வையில் நனைந்தது. "என்ன... என்ன தவறு?"

"ஞாபகமில்லையா? அரசு மருத்துவமனையில்... எங்கம்மாவுக்கு போலி ரிப்போர்ட் தயார் செஞ்சீங்களே? ..."

டாக்டருக்கு ஞாபகம் வந்தது.

மருத்துவ தவறால் இறந்த பெண்ணுக்கு, தன் பெயர் கெட்டு விடக் கூடாதென்று "ஹார்ட் அட்டாக்" என போலி ரிப்போர்ட் தயாரித்திருந்தார்.

"அவங்க மகன் நான்..." என்றது அந்த குரல்.

அரவிந்த் உடைந்து போனார். "ப்ளீஸ்... என் பொண்ணை விட்டுரு..."

"நீங்க என் அம்மாவை காப்பாத்தல... ஆனா அதுக்காக நான் உங்க பொண்ணை கொல்லப் போறதில்லை...ஆனா... நீங்க எல்லாருக்கும் முன்னாடி உண்மையை ஒத்துக்கணும்."

அடுத்த நாள்.

மருத்துவமனையில் மீடியா ஆட்கள்.

டாக்டர் அரவிந்த் தன் தவறை கண்ணீர் மல்க ஒப்புக்கொண்டார்.

ரயில்வே கிடங்கிலிருந்த அவரது மகள் உயிருடன் மீட்கப்பட்டாள். அவளைக் கட்டிக் கொண்டு அழுதார் அரவிந்த்.

அப்போது அருகில் இருந்த போலீஸ் அதிகாரி சொன்னார், "டாக்டர்... எல்லா கிட்நாப்களும் பணத்துக்காக நடப்பதில்லை... உண்மைக்காகவும் சில கிட்நாப்கள் நடக்கும்..."

முகில் தினகரன்
கோயமுத்தூர்





"என்னங்க **facebook** ல ஒரு 'கண்ணீர் அஞ்சலி'க்கு கீழ கமெண்ட் போடறவங்கள்ளாம் '**Rest In Peace**' னு போடாம, '**Rest In Peas**' னு போட்டிருக்காங்க?"

"அவரு 'பட்டாணி' சாப்பிட்டுக்கிட்டு இருந்தப்போ நெஞ்சைப் பிடிச்சிக்கிட்டே செத்துட்டாராம்!"


–0–0–0–0–

ஆசிரியரும், மாணவனும் :

"உங்கப்பா மாவடு வியாபாரம் செய்யறாரா?"

"ஏன் சார் கேக்கறீங்க? "

"நாவினால் சுட்ட வடு'ன்னு எழுதறதுக்கு பதிலா, 'நாவினால் சுட்ட மாவடு'ன்னு எழுதியிருக்கியே!"



டீ.என்.பாலகிருஷ்ணன்



1. மூச்சை நல்லா இழுத்து விடுங்க

டாக்டர் என்ன வெச்சி காமெடி கீமெடி பன்னலியே

2. தலைவரே உங்க மேல ஊழல் குற்றச்சாட்டு சுமத்தியிருக்காங்களே

நான் அரசியலுக்கு வந்த முப்பது வருஷமா சுமத்திக்கிட்டுதானேய்யா இருக்காங்க ?

3. மெகா சீரியல் இயக்கறத ஏன் விட்டுட்டீங்க?

என்னோட ரசிக ரசிகைகள் கண்ணீர் சிந்தினது போதுமுன்னுதான்



ஏ.மூர்த்தி

ஆப்பிள் ஸ்வீட் டா இருக்கா?

இல்லைம்மா...ஃப்ரூட்டாத்தான் இருக்கு!

2.. வினாத்தாள் ஏன் இவ்வளவு ஈரமா இருக்கு ?

அது லீக்கான வினாத்தாள்-ங்க



எம்.அசோக்ராஜா

புதுக்கவிதை

1. லாட்டரியில் பரிசு
தொலைந்து போனது ஏழ்மையல்ல
பரிசுச் சீட்டு..

2 .பேருந்தில் திருடர் என
பயணிகளை எச்சரித்து
திரும்புகிறேன்
என் பர்ஸை. காணவில்லை...

3. ஒரே கல்லில் மூன்று மாங்காய்
கல்லுக்கு எட்டியது பல்லுக்கு
எட்டவில்லை
சாக்கடையில் மாங்காய்...

4. இழுத்த இழுப்புக்கு வர
நான் என்ன உன் புருசனா
புலம்புகிறது கைப்பை ஜிப்

ஆ.மாணிக்கம்
பொள்ளாச்சி







அடுத்த இதழ் ஜூலை 16-31 **என் வீட்டுத் தோட்டம் சிறப்பிதழ்**. உங்கள் வீட்டுத்தோட்டத்தில் என்னென்ன செடிகள் உள்ளது. உங்களுக்கு பிடித்த செடி எது? அதன் போட்டோ... உங்கள் தோட்டம் உருவாக்கப்பட்ட விதம் இப்படி சுவாரஸ்யமாக எழுதவும். ஒரு படைப்பாளருக்கு ஒரு பக்கம் ஒதுக்கப்படும். எனவே இரண்டு போட்டோ மற்றும் சுருக்கமாக உங்கள் தோட்டத்தைப் பற்றி எழுதி அனுப்பவும்.

தோட்டம் இல்லை என்பவர்கள் உங்களுக்கு பிடித்த செடி எது?

ஏன்? என்று தெரிவித்தும் எழுதி அனுப்புங்கள்.

.சிறந்தவற்றுக்கு வழக்கம் போல் பரிசும் உண்டு...

அனுப்ப வேண்டி கடைசி தேதி
13.07.2026

வாட்சப் 7094053241

இங்கு பரிவுகள்
விற்பனைக்கல்ல...
போய்கிட்டேயிரு...

நம்.திரு.ரஅம்ஏச்



கதைகளில், கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல. படைப்புகள் கொடுத்த வலைதளங்களுக்கு நன்றி.

அழகிய ஆரம்பம் இன்று மின்னிதழ் வெளியிடுபவர்

ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று மின்னிதழ் - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் : 7094053241

